**செய்தி வெளியீடு எண்: 915** **நாள்: 04.07.2024**

# செய்தி வெளியீடு

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திற்கான பாசன நீர் வழங்கு விதிகளின்படி, நீர்த்தேக்கத்தில் குறைந்த அளவாக 1260 மில்லியன் கனஅடி நீர் இருந்தால் (பொதுவாக குறிப்பிட்டுள்ளதால் பயன்படுத்த முடியாத இருப்பு நீரை பிரிக்காமல்) ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1ம் தேதி முதல் நவம்பர் 30ம் தேதி முடிய 150 நாட்களுக்கு இரு பிரதான கால்வாய்களிலும் தண்ணீர் வழங்க வரையறுக்கப்பட்ட விதிமுறை வகை செய்யப்பட்டுள்ளது. தற்போது அணையில் 1225.78மி.க.அடி (பயன்படுத்தப்படாத இருப்பு நீர் நீங்கலாக) தண்ணீர் உள்ளது. அணைக்கு கடந்த 15 நாட்களாக 338.55 மி.க.அடி அல்லது நாள் ஒன்றுக்கு 22.57 மி.க.அடி (தோராயமாக) நீர் வந்த வண்ணமுள்ளதாலும், நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளதாலும் மற்றும் எதிர்வரும் பருவமழையினால் பெறப்படும் நீரினையும் கருத்தில் கொண்டு கிருஷ்ணகிரி அணையிலிருந்து முதல் போக பாசனத்திற்கு 05.07.2024 முதல் 11.11.2024 வரை 130 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம் **இடதுபுற கால்வாய்** (பெரியமுத்தூர், சுண்டேகுப்பம், திம்மாபுரம், சௌட்டஹள்ளி, தளிஹள்ளி, மாரிசெட்டிஹள்ளி, பாலேகுளி, நாகோஜனஹள்ளி) **வலதுபுற கால்வாய்** (கால்வேஹள்ளி, குண்டலப்பட்டி, மிட்டஹள்ளி, காவேரிப்பட்டிணம், எர்ரஹள்ளி, பெண்ணேஸ்வரமடம், பையூர், ஜனப்பரஅள்ளி) உள்ள 9012 ஏக்கர் பாசனபரப்புகள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**நீர்வளத் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu